This question paper consists of **31** questions and **8** printed pages.

**8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.**

**Roll No.**
பதிவெண்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

# TAMIL
# தமிழ்
# (237)

**Code No.** குறியீடு எண் **64/S/O/TM**

**SET/பகுதி** **A**

**Day and Date of Examination** ..............................................................

*(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி)*

**Signature of Invigilators :** 1. ..............................................................

*(தேர்வு மேற்பார்வையாளர் கைியொப்பம்)* : 2. ..............................................................

---

**பொதுக்குறிப்புகள் :**

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுது வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிகக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (அ, ஆ, இ, ஈ) ஏதேனும் ஒன்றைக் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதவேண்டும்.
4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
5. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழதும் தகுதியை இழக்க நேரிடும்.
6. உங்களது வினாத்தாளின் எண்ணை விடைத்தாளில் எழுதுங்கள்.



Unnati Educations
9899436384, 9654279279

# TAMIL
# தமிழ்
# (237)

கால அளவு : 3 மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : 100

**குறிப்பு :**

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

(2) விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதுவும்.

பொருத்தமான விடையை எடுத்து எழுதுக. (11 × 1 = 11)

1. உரிமைச் செம்பயிரில் தமிழ் என்னவாக இருக்கின்றது.

   (அ) மலராக (ஆ) காயாக

   (இ) வேராக (ஈ) கனியாக

2. இந்தத் தேசம் பூக்களின் தலையில் பெட்ரோலை ஊற்றிவிட்டு என்ன தேடுகிறது ?

   (அ) நெருப்பு (ஆ) நீர்

   (இ) மணல் (ஈ) தீப்பெட்டி

3. வானவர்கள் யாவர் ?

   (அ) அசுரர்கள் (ஆ) தேவர்கள்

   (இ) காட்டுவாசிகள் (ஈ) பாண்டவர்கள்

4. அயோத்திநகர் எல்லையைக் கடந்து மூவரும் __________ நதியை அடைந்தார்கள்

   (அ) காவிரி (ஆ) நர்மதை

   (இ) சரயு (ஈ) தாமிரபரணி



Unnati Educations
9899436384, 9654279279

5. கற்றறிந்தவரை வள்ளுவர் எப்பெயரால் சுட்டுகின்றார்?

(அ) அறிஞர் (ஆ) சான்றோர்

(இ) மனிதர் (ஈ) புலவர்

6. சுரம் போக்கி ________ கொண்டார் இல்லை

(அ) உல்கு (ஆ) பணம்

(இ) அறிவு (ஈ) ஆற்றல்

7. கணினியின் நினைவு அலகு________

(அ) வினாடி (ஆ) கிலோ கிராம்

(இ) மில்லி கிராம் (ஈ) பைட்

8. அரித்மடிக் எஞ்சின் கண்டறிந்தவர்

(அ) மார்கோனி (ஆ) அரிஸ்டாட்டில்

(இ) ஃபிளமிங் (ஈ) பிளேஸ் பாஸ்கல்

9. கட்டளைகளில் தருமம் எனக் குறிப்பிடப்படுவது

(அ) பௌத்த தருமம் (ஆ) சமணம் தருமம்

(இ) இந்து தருமம் (ஈ) இசுலாமிய தருமம்

10. மூன்றாம் வேற்றுமை

(அ) முருகனது வீடு (ஆ) மலையின் வீழருவி

(இ) மண்ணால் பானை வனைந்தான் (ஈ) வீட்டைக் கட்டினான்

11. தன்மை ஒருமை

(அ) நாங்கள் (ஆ) அவர்கள்

(இ) நான் (ஈ) நீங்கள்



Unnati Educations
9899436384, 9654279279

12. கீழ்க்காணும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.

தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களைச் சங்க இலக்கியம், சமய இலக்கியம், நீதி இலக்கியம், சிற்றிலக்கியம், புதுமைத் தமிழிலக்கியம் என்று பல வகையாகப் பாகுபாடு செய்யலாம். சங்க இலக்கியத்திற்கு அடுத்த நிலையில் சிறப்புடையவனாகப் போற்றப்படுவன நீதி இலக்கியமும் சமய இலக்கியமும் ஆகும். சங்க காலத்திற்குப் பின்னர் நீதி நூல்கள் பல தமிழில் தோன்றியுள்ளன. இந்நீதி நூல்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முடிமணியாகவும் திருக்குறள் விளங்குகிறது. சமய மலர்ச்சிக் காலத்திற்கு முன்னரும் பின்னரும் இயற்றப்பட்டுள்ள நீதி நூல்களெல்லாம் திருக்குறளை அடியொற்றி எழுதப்பட்டனவாகும்.

வினாக்கள் :

(அ) தமிழ்மொழி இலக்கியங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்? **(3)**

(ஆ) சங்க இலக்கியத்திற்கு அடுத்ததாகப் போற்றப்படும் இலக்கியங்கள் எவை? **(3)**

(இ) திருக்குறள் எவற்றுக்கு முன்னோடியாக விளங்குகிறது? **(3)**

(ஈ) திருக்குறளை அடியொற்றி எழுதப்பட்ட நூற்கள் எக்காலத்தவை? **(2)**



Unnati Educations
9899436384, 9654279279

13. பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

கொலை மறுக்கும் வீரமீரக்
கொள்கை சொல்லும் பொன்மொழி
கொடியவர்க்கும் நன்மை செய்யக்
கூறுகின்றன இன்மொழி
அலைமிகுந்த வறுமை வந்தே
அவதி யுற்ற நாளிலும்
ஐயமிட்ட உண்ணுகின்ற
அறிவு சொல்லும் தமிழ் மொழி
கலை மிகுந்த இன்ப வாழ்வின்
களி மிகுந்த பொழுதிலும்
கருணை செய்தல் விட்டி டாத
கல்வி நல்கும் மொழியிது

வினாக்கள் :

(அ) தமிழைப் பொன்மொழி என்று சொல்லக் காரணம் என்ன? **(2)**

(ஆ) தமிழை இன் மொழி என்ற சொல்லக் காரணம் என்ன? **(2)**

(இ) தமிழ்க் கல்வி தரும் மொழி என்பதை விளக்குக? **(2)**

14. பெரியோரின் சிறுபிழை எதனைப் போல் தெரியும்? **(1)**

15. அருவிகளின் செயல்கள் யாவை? **(1)**

16. அஞ்சம்மா எதைக் கழற்றி எறிந்தாள்? **(1)**

17. கலிங்கப் போரில் சிறைபிடிக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்கள், இறந்து போனவர்கள் ஆகியோரின் எண்ணுக்கை யாது? **(1)**

18. தமிழில் மொழி பெயர்க்க. **(2)**

(அ) Versatility

(ஆ) Punched card



Unnati Educations
9899436384, 9654279279

19. (அ) சேர்த்து எழுதுக. **(4 × ½ = 2)**

(1) இனிமை +நீர் (2) பிறிது+உழி+இல்

(3) மூப்பு+இன்+கண் (4) செம்மை+தமிழ்+நாடு

(ஆ) கூறியவாறு செய்க. **(2)**

(1) மாணவர்கள் கைதட்டினர். (பொருத்தமான இரட்டைக்கிளவி சேர்க்க)

(2) இராமன் காட்டிற்கு சென்றான். (வேற்றுமை உருபை எடுத்து எழுதுக)

(இ) கீழ்க்கண்ட தொடர்புகளில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்ட நிரப்புக. **(2)**

(1) மேதினியில் இட்டார் பெரியோர்;_________இழிகுலத்தோர்.

(2) பகிழ்ந்து கொள்வதால் இன்பம் அதிகரிக்கும். துன்பம் ________

(ஈ) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக. **(2)**

(1) சாந்துணையும் (2) புலம்

(3) பொச்சாந்து (4) ஆற்றுதல்

20. பின்வரும் மரபுத் தொடர்புகளைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. **(2)**

(1) ஒருகை பார்த்தல் (2) பொடி வைத்தல்

21. திருவள்ளுவரின் நினைவுச் சின்னம் அமைந்துள்ள இடம் எது ? **(1)**

22. 'இணையவழிக் கல்வி' என்ற தலைப்பில் குறிப்புரை ஒன்று எழுதுக. **(4)**

23. கல்வி கற்பதால் உண்டாகும் உயர்வினை விளக்குக. **(5)**

24. '75% அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இட ஒதுக்கீடு' என்பது குறித்து அரசு தரும் அறிவிப்பினை எழுதுக **(5)**

**(அல்லது)**

உணவுப் பொருளை வீணாக்காதீர் என்பது பற்றிய விளம்பரத்தினை எழுதுக.

25. (அ) பொருப்பு – பொறுப்பு பொருள் வேறுபாடு கூறி அவற்றை தொடரில் அமைத்து எழுதுக. **(2)**

(ஆ) அலறுதல் – குமுறுதல் எப்பறவைகளுக்குரிய ஒலிகள் என்பதைக் குறிப்பிடுக. **(2)**



Unnati Educations
9899436384, 9654279279

26. உமது பெயர் கமலா/கண்ணன் என்றும் உமது வங்கிக் கணக்கெண் 3207891 என்றும் கொண்டு ரூ 20,000 ஐ 12.5.2021 அன்று வங்கியில் இருந்து எடுப்பதற்கு ஏதுவாக கீழே கொடுக்கப்பட்டுள்ள சேமிப்புக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்க. உமது முகவரி 62, கிருஷ்ணர் கோவில் தெரு, கும்பிகுளம் என்று கொள்க. **(5)**

ATM மனுச் செய்து விட்டீர்களா

பாரத ஸ்டேட் பாங்கு

சேமிப்புக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் வடிவம்

நாள் : __________

கணக்கெண்: ___________

எனக்கு மட்டும் (எழுந்தால் எழுதுக) ____________________________

____________________________________________ ரூபாய் வழங்கவும்.

| ரூ |
|---|

அடையாள வில்லை எண் : _____________

பட்டியல் எண் : ___________________

பணம் வழங்குக

அனுமதிக்கும் அதிகாரி

கணக்கு வைத்திருப்பவர் பெயர் :

முகவரி : _______________________________

_________________________________________

தொலைபேசி எண் : _____________________

கணக்கு வைத்திருப்பவர் பெயர் : ____________

கையொப்பம் : _____________________________

***(அல்லது)***

ஒரு பள்ளியின் தகவல் பலகையில் இடம்பெறும் தகவல்கள் குறித்த அட்டவணை தயாரிக்க.

27. அசோகனின் கட்டளைகள் குறித்து விரிவாக விளக்கி வரைக. **(5)**

***(அல்லது)***

காந்தியடிகளின் தொண்டுள்ளத்தை விளக்குக.



Unnati Educations
9899436384, 9654279279

28. பிழை திருத்தம் செய்க: **(5)**

(1) வாண்கோலி கூவுகின்றது.

(2) பன்றி கதறும்

(3) சிங்கக்குட்டி வந்தது.

(4) நான் நேற்று கொவிலுக்குச் சென்றேன்.

(5) கப்பளில் ஏறி வெலிநாடு சென்றாண்.

29. தலைக்கசவசம் அணிய வேண்டியதன் அவசியத்தை அறிவுறுத்தி நண்பனுக்குக் கடிதம் எழுதுக. **(7)**

**(அல்லது)**

நீவிர் வாழும் நகரப் பகுதியிலுள்ள சீர்கேடுகளைச் சரி செய்யுமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

30. ஏதேனும் ஒன்றுக்கு நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. **(5)**

(அ) வீட்டுற்கோர் புத்தகசாலை

(ஆ) கற்றது கை மண் அளவு

(இ) உள்ளத்தனைய மலர் நீட்டம்

31. ஏதேனும் ஒன்றுக்கு இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. **(10)**

(அ) மாணவரும் சமூகத் தொண்டும்

(ஆ) நான் போற்றும் தலைவர்

(இ) இன்பச்சுற்றுலா.

---


Unnati Educations
9899436384, 9654279279